P.R.NO.61 Date - 27-1-2020

ந.க. சு5 / 43329/ 2019
நாள். 26.01.2020

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

## பத்திரிக்கை செய்தி

## இந்திய நுகர்வோருக்கு ஒரு திருப்பு முனை-நுகர்வோர் பாதுகாப்புத் துறை சட்டம்-2019 "தேசிய நுகர்வோர் தின விழா"

தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்வரும் 28.01.2020 அன்று காலை 10.00 மணியளவில் இந்திய நுகர்வோருக்கு ஒரு திருப்பு முனை-நுகர்வோர் பாதுகாப்புத் துறை சட்டம்-2019 என்ற தலைப்பின் கீழ் தேசிய நுகர்வோர் தின விழா தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் நுகர்வோர் தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்கள், மாவட்ட முகவரிப்பட்டியலில் இணைப்பு பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர்கள், சுயஉதவிக்குழுக்கள், ஆகியோர்களை ஒருங்கிணைத்து விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், இவ்விழாவில் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் செயல்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பாக போட்டிகள் நடத்தி அதில் தேர்வு செய்யப்படும் மாணவ மாணவியர்களுக்கு பரிசளிப்பும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களில் சிறப்பாக செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் தேர்வு குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு பரிசளிப்பும் வழங்கப்பட உள்ளது. மேலும் விழாவின் போது பொது சுகாதாரத் துறை, மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை, சட்டமுறை எடையளவுகள் போன்ற அரசுத்துறை அலுவலர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் கண்காட்சி மற்றும் நேரடி விளக்க செயல்பாடுகளும் செய்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது

மாவட்ட ஆட்சித்தலைவர்,
தஞ்சாவூர்.

26-1-2020 26/01/2020 26/01/2020 DSO. 26/1/2020